இளங்கலை தமிழ்

வருடம் : 2018 - 2019 onwards பருவம் : 6

பாடத்தலைப்பு : முதன்மைத்தாள் XII

சங்க இலக்கியம் - புறம்

பாடக்குறியீட்டு எண் : 18 BTA 62 C

அலகு : 4

பரிபாடல் செவ்வேள் - 5

வையை - 7

திருமால் - 13

தயார் செய்தவர் :

முனைவர். வை. செல்வசுப்பிரமணியன்

தொடர்பு எண் : 9952621715

தமிழ்த்துறை.

அலகு : 4 பரிபாடல், செவ்வேள், வைகை, திருமால்

<u>பரிபாடல் : 5 செவ்வேள்</u> 18 BTA 62C

## ஆறுமுகப் பெருமானின் வெற்றிச் செயல்கள்

(1-10) பாய் இரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு...
மலை ஆறாகப் படுத்த மீ இரு கயந்தலை

செம்மையான ஆறுதலைகளையுடைய முருகப்பெருமானே! மிக உயர்ந்த பிணிமுகம் என்னும் யானையினை ஊர்தியாகக் கொண்டு, பரந்துபட்டதும் அளவில் பெரியதுமான குளிர்ந்த கடலில் உள்ள பாறைகள் தூளாகும்படிப் புகுந்து போர் செய்து, தீப்பொறியுடன் ஒளிவிடும்படி உன் வேற்படையினைத் திரித்து விட்டெறிந்தாய்; உன்னால் எறியப்பட்ட அவ்வேல் அமரரையும் பிறரையும் துன்புறுத்துவதையே இயல்பாகக் கொண்ட சூரபன்மனாகிய மாமரத்தினை வேருடன் வெட்டியது; வெற்றியையே தாங்கி உடைமையாகக் கொண்டமையால் புண்ணியம் செய்தவர், பாவம் செய்தவர் என்னும் இருவகையில் புண்ணியம் செய்தவர் என்னும் பெயரைப் பெயரளவில் மட்டுமே பெற்று, பிற உயிர்களைக் கொன்று உண்பதையே வழக்கமாகக் கொண்ட தீவினை செய்ய அஞ்சாதவரும், மாயம் செய்வதில் வல்லவருமாகிய அவுணருடன் போர் செய்து அவர்களது குலத்தையே அழித்தது. மேலும் அவ்வேல் இந்நாவலந்தீவின் வடதிசையுள்ள கிரௌஞ்சம் என்னும் பறவையின் பெயரைப் பெற்ற பெரியமலையினைத் துளைத்து அதனிடையில் வழியுண்டாக்கிய சிறப்பும் உடையது; அத்தகைய வேலினைக் கையிலேந்திய வீரன் நீ!

## வேலனது வெறியாட்டு

11 – 21
" மீ - இரு கயந்தலை முந்நான்கு முழவுத் தோள்,
.... ஏனோர் நின் வலத்தினதே "

அருளைப் பொழியும் ஆறு முகங்களையுடையவனே! மத்தளத்தைப் போன்ற பன்னிரண்டு தோள்களுடன், கதிரவன் தோன்றும் போது உண்டாகும்

செந்நிற அழகுடனும் விளங்கும் முருகனே!
சரவணப்பூம் பொய்கையில் தாமரைப் பூவில் பிறந்தவனே!
அழித்தல் தொழிலையுடைய சிவபெருமானின் மகனே!
சிவந்த நிறமுடைய அழகனே! சான்றாண்மை மிக்கவனே
உயிர்களுக்கெல்லாம் தலைவனாகிய இறைவனே! எனப்
பலவாறு கூறும் புகழ்மொழிகளால், நீ வெளிப்பட்டுத்
தோன்றும் வெறியாட்டு களத்தில் வேலன்
உன்னைப்பாடும் வெறிப்பாடல்களும் உள்ளன.

இவ்வுலகம் உன்னையே தலைவனாகக் கொண்டது
என்பதால் வேலன்பாடும் வெறியாட்டுப் பாடல்கள்
உன்னையே பாட்டுடைத் தலைவனாக உடையவை.
ஆதலின் உன்புகழ்பாடும் அவை பொய்மையானவையும்
அல்ல; வெறியாடும் பொழுது அவன் உன்னைக் கண்டு
வணங்கிப் போற்றிப் பாடுவதால் அப்பாடல்கள் பொய்ம்மை
-யானவையும் அல்ல; தலைமைச் சிறப்பினையுடைய நீ
உருவம், பிறப்பு, நிறம், இனம் போன்ற பல்வேறு
பாடற்பொருள்களில் ஒன்றை உடையவனாகத்
தோன்றுமிடத்து உனது தலைமைச் சிறப்பினைப்
பெறமாட்டாய்; ஆயினும் உன்னையல்லாத பிற
உயிர்கள் எல்லாம் நல்வினையால் சிறப்புமிக்க
தெய்வப் பிறப்பினராகப் பிறத்தலும், தீவினையால்
தாழ்ந்த பிறப்பினராகப் பிறத்தலும் ஆகிய இந்நிகழ்ச்சி
உன் ஆணையின்படியே நிகழும். ஆதலின் உனக்குரிய
முழுமுதல் தன்மையாகிய சிறப்பு எப்பொழுதும்
உன்னை விட்டு நீங்குவதில்லை.

## முருகப் பிரானின் பிறப்பு

(22 - 54) "ஆதி அந்தணன் அறிந்து பரி கொளுவ.
... ஒருவனை; வாழி ஓங்கு விறல் சேஎய்!"

நான்முகனாகிய அந்தணன் வேதங்களாகிய
குதிரைகள் பூட்டப்பட்ட பூமியாகிய தேரைச்
செலுத்தும் பாகனாகித் தேரைச் செலுத்தும்

முறையறிந்து செலுத்தினான். சிவபெருமான் அந்தேரில் ஏறிச்சென்று, வெள்ளி, பொன், இரும்பு ஆகிய மூன்று வகையில் அமைந்த திரிபுரம் என்னும் மூன்று மதில்களை இமயமலையையே வில்லாகவும் வாசுகி என்னும் பாம்பினை நாணாகவும் கொண்டு ஆற்றல் மிக்க ஒரு தீ அம்பினால் எரிந்து சாம்பலாகும்படி திசைகள் எல்லாம் புகழும்படியும் அழித்தான். தக்கன் அமரர்க்குச் செய்த வேள்வியில் இடப்பட்ட அவியுணவினை உண்டவரும், சினத்தால் பொன்னிறக் கண்ணையு-டையவருமாகிய அச்சிவபெருமான் இமவான் மகளாகிய உமையம்மையோடு புணர்ந்து காமத்தை நுகர்கின்ற திருமணநாளில் அமையாத புணர்ச்சியை இந்திரன் வேண்டுகோளுக்கேற்ப ஒரு நாளில் தவிர்ந்தான்.

நெற்றியின் நடுவில் இமையாத நெருப்புக் கண்ணையுடைய அச்சிவபெருமானிடத்தில் அமரர் தலைவனாகிய இந்திரன் சென்று, "உனது புணர்ச்சியினால் தோன்றிய கருவினை அழிப்பாயாக" என்று ஒரு வரத்தினை வேண்டிப் பெற்றான். தீயினைக் கக்குவதும் என்றும் அழியாத தன்மையுடையது-மான மழுப்படையைக் கையில் உடையவனான அச்சிவபெருமான் வாய்மை தவறாதவனாதலின், நூறு வேள்விகளைச் செய்து அமரர்க்குத் தலைவனும் ஒளிவிடும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தவனும் ஆகிய அவ்விந்திரனுக்கு, தான் அளித்த வரம் செய்வதற்கு அரியது என்று அதனை மறுக்காதவனாய் இவ்வுலகங்கள் ஏழும் தனது வாய்மை தவறாத செயலைக் கண்டு வியந்து நிற்க, தனது கருவின் உருவினைச் சிதைத்துப் பல துண்டுகளாக்கி இந்திரன் கையில் கொடுத்தான்.

சிவபெருமான் அளித்த கருவைப் பெற்றுக் கொண்ட இந்திரனிடத்திலிருந்து ஏற்றுக் கொண்ட ஏழு முனிவர்களும், பிளந்து துண்டுகளாக்கப்பட்ட இக்கரு ஆறுமுகமுடைய மைந்தனாக்கி

அமரர்களுக்குத் தலைவனாகும் என்பதைத் தமது தவத்தின் வலிமையால் பெற்ற ஞானத்தால் உணர்ந்து கொண்டனர். அம்முனிவர்கள், சிவபெருமான் சிதைத்துக் கொடுத்த கருத்துண்டுகளைத் தம் மனைவியர் உட்கொண்டு தம் வயிற்றில் தாங்கிக் கருவை வளர்த்தால் கற்புடைமைக்குப் பொருந்தாது என்று எண்ணி, வேள்வி வளர்த்து, அக்கருத் துண்டுகளைத் தீயே தாங்கட்டும் என்று ஒன்றாகச் சேர்த்து வேள்வித் தீயிலிட்டனர். வேள்விக் குண்டங்களில் மூவகைத் தீயினாலும் கொள்ளப்பட்ட அவிப்பாகத்துடன் சேர்ந்த எச்சிலாகிய அவற்றை வானின் வடதிசையில் உறைகின்ற முனிவர்களின் கடவுட்கற்பினையுடைய ஒருமீனாகிய அருந்ததி ஒழிந்த, விளங்குகின்ற மற்றைய கார்த்திகை மகளிராகிய அறுவரும் அப்பொழுதே உண்டனர்.

அவ்வாறு உண்ட முனிவர்களது மனைவியர் தம் கணவர் வேண்டக் கொண்டதனாலேயே உண்டனராதலின் அவர்களது கற்புடைமைக்கு இழுக்கில்லை என்பதால் குற்றமற்ற கற்பினையுடைய அம்மகளிர் அறுவரும் உன்னைத் தங்கள் வயிற்றில் வளரும் கருவாகத் தாங்கிக் கொண்டனர். மலைகளில் மிக உயர்ந்து ஓங்கியதாகிய இமயமலையில் நீலப் பூக்களையுடைய பசுமை மிக்க சரவணம் என்னும் பொய்கையில் தாமரைப் பூவாகிய பள்ளியுள் ஆறுமகளிரும் ஒருசேர உன்னைப் பெற்றெடுத்தனர் என்று சொல்வோர் கூறுவர். பெருமை மிக்க புகழுக்குரிய முருகப்பெருமானே! உன்னைக் கார்த்திகை மகளிர் பெற்ற அப்பொழுதே, பிறர்க்கு அரிதானதும் யாவரும் விரும்புதற்குக் காரணமானதுமாகிய சிறப்பினையுடைய அமரர் தலைவனாகும் இந்திரன், பகை மிகக் கொண்டு, முனிவர்கட்குத் தான் கருவினைக் கொடுத்ததையும், வரம் அளித்ததையும் மறந்து

நெருப்பினை உமிழும் தனது உச்சிறப்படையில் வைத்தனன். முன் ஆறு துண்டுகளாக இருந்தவை ஆறு வடிவமாகிப் பின் ஆறும் சேர்ந்து ஒரே உருவமாக, ஒருவனாக நீ ஆனாய்! ஆற்றல் பொருந்திய சிவபெருமான் மைந்தனே! அவ்வாறு நீ ஒருவனான போதே இந்திரனை வென்று உயர்ந்த வெற்றிச் சிறப்புடையவன் ஆயினை! நீ வாழ்க!

## தேவர் சேனைக்குத் தலைவனாதல்

(55-70) "ஆரா உடம்பின் நீ அமர்ந்து விளையாடிய ... பொறிவரிக் கொட்டையொடு புகழ்வரம்பு இகந்தோய்"

உனது குழந்தைப் பருவத்திலேயே வளர்ச்சி-யடைந்த உடம்பினைக் கொண்டு நீ விரும்பி விளையாட்டாக இந்திரனுடன் செய்த போரில், படைக்கருவிகளை ஏந்தாத உனது வெறும் கைகளுக்கே ஆற்றாதவனாகி இந்திரன் அஞ்சி ஓடியதைக் கண்ட இன்பமுற்ற நெருப்புக் கடவுள், இப்பேராற்றல் பெற்ற இவனே நம் அமரர் படைத் தலைவனாம் தகுதியுடையவன் என்று கருதி, தனது உடம்பிலுள்ள நெருப்பின் தன்மையிலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து வளப்பமான கோழிச்சேவலாக்கிக் கொடுத்தான். அதுகண்டு வானுலகத்தில் உள்ள நிறைந்த செல்வங்களையெல்லாம் பெற்ற இந்திரன் தன் தன்மையிலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து விளங்குகின்ற புள்ளிகளையும், அழகிய தோகையினையுமுடைய மயிற் சேவலாக்கி உனக்கு அளித்தான். அறம் தவறாத செங்கோலைக் கொண்ட இயமனதும் தனது தன்மையிலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து அதனை, கரிய கண்ணினையுடைய அழகிய வெள்ளாட்டுக் குட்டியாக்கி உனக்கு அளித்தான்.

அவ்வாறு நெருப்புக் கடவுளும் இந்திரனும் இயமனும் பிறதேவர்களும் தத்தமது உடம்பிலிருந்து

பிரித்துப் படைகளாக்கி உனக்குக் கொடுத்த வெள்ளாட்டுக் குட்டியும், மயிலும், கோழிச் சேவலும் இலச்சினையிடப்பட்ட விரிந்த வில்லும், தோமரமும் வாட்படையும், இலை செறிந்த ஈட்டியும் மழுப்படையும் கொடியும் காய்கின்ற கதிர்களையுடைய கதிரவனை யொத்த படைகளும் மாலையும் மணிகளும் ஆகிய வேறு வேறு வடிவினவாகிய இவற்றை உன்னுடைய பன்னிரண்டு கைகளிலும் ஏந்திக் கொண்டு, நீ பிறந்த தாமரை மலரின் அழகிய பொகுட்டிலிருந்து பெயர்ந்து செல்ல முடியாத இளமைப்பருவத்திலேயே, குற்றமற்ற வானுலகில் வாழும் தேவர் தலைவனாகிய இந்திரனுடைய அரசின் வரம்பினைக் கடந்த பெருமானே!

## முருகன் திருவடி அடைவோரும் அடையாதோரும்.

(71 - 77) "நின் குணம் எதிர்கொண்டோர் அறம் கொண்டோர் அல்லதை, ... மறு பிறப்பு இல் என்றும் மடவோரும், சேரார் நின் நிழல்;"

எண் குணத்தானாகிய உனது அருட்குணத்தை விரும்பி ஏற்றுக்கொண்டு உனது திருவருளையே அடையும் நோக்குடன் உலகப் பற்றினை நீக்கி, உன்னைப் பற்றும் அறநெறியின் வழியில் வாழும் முறைமையுடையோரும், உனது திருவடிக் கடலில் திளைத்து நின்று பெருந்தவம் செய்தவரும் பிறரால் வணங்கிப் போற்றத் தகுந்த அருளாளருமாகிய இவர்கள் மட்டுமே உனது திருவடி நிழலை எளிதில் அடைவர்; பிற உயிர்களை அழிக்கும் தீய, வஞ்ச நெஞ்சத்துடன் கடுஞ்சினம் உடையவரும், அறநெறியில் செல்லும் திறத்தினை அற்ற மதியிலாத கீழ்மக்களும், பொய்த்தவ வேடம் உடையவராய்

தீய ஒழுக்கத்துடன் ஒழுகும் போலித் தவ விரதத்தை-யுடையவரும், இப்பிறப்பும் இவ்வுலக இன்பமுமே மட்டுமே உண்மை, மறுபிறப்பு, அறம், பாவம், கடவுள், மறுமை இன்பம் போன்றவை பொய்யென்று பேசும் அறியாமையுடையவரும் உனது திருவடி நிழலை அடையமாட்டார்.

## முருகப்பெருமானிடம் வேண்டுதல்

(77- 81) "அன்னோர் அல்லது இன்னோர் .....
உருள் இணர்க் கடம்பின் ஒலி தாரோயே!

உனது திருவருளை விரும்பாத கயவர்களால் அடையமுடியாத உன் திருவடி நிழல் உன் அருட் குணத்தை எதிர்கொண்ட சான்றோர்களால் எளிதில் அடைய முடியும் என்பது உண்மையாதலின், தேர் உருளையைப் போன்ற பூக்கள் கொண்ட கொத்தினையுடைய கடம்பமலர் மாலையினை அணிந்த முருகப்பெருமானே! உனது திருவடிப்பேற்றை அடைய விரும்பும் யாம் உன்னிடம் வேண்டுவன இவ்வுலகில் இன்பம் துய்க்கப்பயன்படும் பொருள்களும், உலகப்பொருள்களைத் தருவதற்குக் காரணமாகிய பொன்னும் அவற்றால் துய்க்கப்படும் இவ்வுலக இன்பமும் அல்ல; எங்களுக்கு வீடுபேறளிக்கும் உனது திருவருளும் அத்திருவருளினைப் பெற நாங்கள் உன்னிடம் செலுத்தும் உண்மையன்பும், அவ்வன்பு உள்ளத்தில் தோன்றுவதற்குக் காரணமான அறமும் ஆகிய மூன்றுமேயாகும்

# வையை

## வையைப் புனலின் வருகை.

கைமயோடக் கோவனார் பாட்டு

பித்தாமத்தார் இசை. பண்ணுப் பாலையாழ்

(1-10) "திரை இரும் பனிப்பௌவம் செவ்விதா அற
முகந்து ... வந்தன்று, வையைப் புனல்.

தலைமகன் தலைமகளோடு புனல் ஆடினான் எனக்கேட்டு இன்புற்ற செவிலித்தாய், தோழியை, 'நீங்கள் ஆடிய புனலணி இன்பம் கூறுக' என்றாட்கு அப்புனலணி இன்பமும், பல்வேறு வகைப்பட்ட இன்பமும் தலைமகன் காதன்மையும் கூறி, 'என்றும் இந்த நீரணி இன்பம் பெறுக, யாம்' என்றது.

மேகமானது, முழங்கும் அலைகளையும் கரிய நிறத்தையும் குளிர்ச்சியையும் உடைய பெரிய கடல் வற்றிப் போகுமாறு அதன் நீரை நேராக முகந்து கொண்டு வந்து, வலிமை மிக்க பெரிய இடி சினத்துடன் முழங்கும் படியாகச் செய்தது; தன்மேல் ஏற்றப்பட்ட நீரின் பாரம் தாங்கமுடியாமல் தம் வயிறு கிழிந்தது போலவும் கரையுடைந்த குளத்தின் நீர் குளத்தினை விட்டு வெளியேறுவதைப் போலவும் மேகம் பெருமழையைப் பெய்தது; சையமலையின் உச்சியில் பெய்யும் அப்பெருமழை -யினால் ஓடும் நீர் திரண்டு வெண்மை மிக்க அருவிகளின் நீராகப் பெருகி பரந்து மழையால் பொலிந்து, பிற இடங்க -ளிலிருந்து ஓட வந்து சேரும் நீருடன் கூட வையை ஆற்றின் நீரானது பெருவெள்ளமாக வந்தது; வையையின் நீர்ப்பெருக்கு உயிர்களுக்கு எல்லா நன்மைகளையும் விளைவித்து, மென்புலமாகிய மருதநிலத்தின் இயற்கையி -னை மிகுத்து, குறிஞ்சி முதலிய வன்புலங்களின் வளத்தைப் பெருக்கியும் ஓட வந்தது.

இக்காட்சி, வெற்றி முரசினையுடைய பாண்டிய மன்னர் வெற்றியால் கைக்கொள்ள விரும்பிய நாட்டினை அடைவதற்கு நிமிர்ந்து செல்லும் அப்பாண்டியனது

பெரிய படையின் நீண்ட அணியினது எழுச்சி போல, நான் செல்லுமிடம் அரியது என்று நினையாமலும், இரவு பகல் என்று பாராமலும் இருபொழுதிலும் இடைவிடாது சூழ வந்து கொண்டிருந்தது.

இக்காட்சி, வெற்றி முரசினையுடைய பாண்டிய மன்னர் வெற்றியால் கைக்கொள்ள விரும்பிய நாட்டினை அடைவதற்கு நிமிர்ந்து செல்லும் அப்பாண்டியனது பெரிய படையின் நீண்ட அணியினது எழுச்சி போல, நான் செல்லுமிடம் அரியது என்று நினையாமலும், இரவு பகல் என்று பாராமலும் இருபொழுதிலும் இடைவிடாது சூழ வந்து கொண்டிருந்தது.

<u>புனலின் செயல்</u>

(11 – ௨௨) " நனி இருள் சோலை நரந்தம் தாஅய், .... செய்கின்றே, செம்பூம் புனல் "

அவ்வாறு வந்த வையையின் வெள்ளம் அடர்ந்த கரிய சோலைகளிலுள்ள நரந்தம்புல்லின் மேல் பரந்தும் செறிந்து விளங்குகின்ற இலைகளையுடைய வேங்கை மரத்தில் மலர்ந்த பூங்கொத்துக்களிலிருந்து உதிர்ந்த பூக்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டும், மழை நீரால் அலைக்கழிக்கப்பட்ட, அடைதற்கரிய மலையுச்சிகளில் உள்ளனவாகிய, காற்றினால் அலைக்கப்பட்டு முறிந்த கிளைகளையுடைய பெரிய மரங்களை வேருடன் பறித்துத் தள்ளி உருட்டிக் கொண்டும், இவ்வாறு மேட்டில் உள்ளவற்றைப் பள்ளத்தில் கொண்டு வந்து பரப்பியும் சென்றது.

வையை வெள்ளத்தினைக் கண்டு உழவர்கள் மகிழ்ச்சியால் உள்ளம் நிறைந்தனர்; முழவங்களும் பெரும்பறைகளும் முழங்கின. ஆடற்கலையின் இலக்கணம் அறியாத மக்கள் தன் மனம் போன போக்கில் ஆடுவது போல, வையையும் தான் வேண்டிய இடங்களில் எல்லாம் சென்றும், இடையறிந்து ஊடி, வேண்டும் போது ஊடல் உணர்ந்து (தணிந்து) செல்ல வேண்டிய, ஊடலின் இயல்பை அறியாத உவகையினையுடையவள் கணவனைக் கடந்து நீங்குவது போல, நீரின் வேகத்தைத் தடுக்கும்

அணையை உடைத்துக் கொண்டும் சென்றது; மேலும் நூல்களில் சொல்லப்பட்ட இலக்கண விதிப்படி செய்யப்பட்ட, உடலில் பூசுவதற்குரிய மணக்கலவையின் மணத்தைப் போல, நறுமணப் பொருள் பலவும் ச சேர்க்கப்பட்டமையால், பொதுவாக மணக்கும் மணத்தை உள்ளே உள்ளே மறைத்து வைத்துக் கொண்டு அப்புதிய அழகிய வையை நீர் மேலே புதிய நறுமணத்தைப் பரப்பிச் சென்றது.

<u>வெள்ளப் பெருக்கைக் கண்ட மக்களின் செயல்!</u>

(23-31) "கவிழ்ந்த புனலின் கயம் தண் கழுநீர் ....
பழன உழவர், பாய் புனல் பரத்தந்து."

ஒருபக்கம், குளத்தில் வையையின் வெள்ளம் பாய்ந்து புகுந்ததால், அக்குளத்தில் மலர்ந்திருந்த செங்கழுநீர் மலர்கள் முழுகும்படி வெள்ளம் நிறைந்து பெருகியது என்று சிலர் கூறினர்; ஒருபக்கம் அழகிய இளம் பெண்கள் மணல்பரப்பின் மேல் விரும்பி எழுதிய தங்கள் பாவையை வையைநீர் அழித்தது என்று கூறி அழுதனர்; ஒருபக்கம் வயலில் விளைந்து முற்றிய இளநெல்லின் மீதும், நெற்கதிரை அறுத்து அடுக்கி வைத்திருந்த அரிகளின் மீதும் மிகுதியான வெள்ளம் பெருகிப் பரந்தது என்று சொல்லி, அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு அறிவிப்பதற்குத் துடிகளை முழக்கினர்; ஒரு பக்கம் ஊரைக் கடலே பெருகி வந்து சூழ்ந்து கொண்டது என்று கூறி மக்கள் பேரொலி எழுப்பினர்; ஒருபக்கம் மேகம், மழை பெய்வதற்குரிய சிறு துளைகள் உடைந்து பெரிய ஓட்டையாகிப் பெருமழையைக் கொட்டுவதற்குக் காரணமாயிற்று என்று சிலர் கூறினர்.

ஒரு பக்கம் இசைபாடும் பாணர்களின் குடியிருப்பாகிய பாக்கத்தை வெள்ளம் சூழ்ந்து கவர்ந்து கொண்டது என்று பேரொலி எழுப்பினர்; ஒரு பக்கம் ஆடும் கூத்தர்கள் குடியிருந்த சோலையை வெள்ளம் சுற்றிச் சூழ்ந்தது என்று கூச்சலிட்டனர்; ஒரு பக்கம் நன்செய் வயல்களை வெள்ளக்கால் வந்து சேர்த்துக் கொண்டது என்று பேசினர்; ஒரு பக்கம் வெள்ளம் பாக்குமரம், தென்னைமரம் ஆகியவற்றின் கழுத்தளவிற்கு மேல் பெருகியதால், வயல்களில

வாழும் வாளைமீன் அவற்றின் பாளையைத் தின்னும் பருவமாயிற்று என்று வியந்து நின்றனர்', ஒரு பக்கம் உழவர்கள் விதைவிதைத்த தாங்கள் நாற்றாங்கால் வெள்ளத்தால் அடித்து வரப்பட்ட வண்டல் மண் மூட கெட்டுப் போயிற்று என்று வருந்தி நின்றனர்',

தன்னுடன் ஊடல் கொண்ட தலைவியின் ஊடலைத் தணிக்க முயன்றும் தணியாத தலைவியின் ஊடலை எவ்வாறாயினும் தணித்துக் கூடுவதற்கு முயற்சி செய்யும் தலைவனது ஆசை வெள்ளம் போலப் பெருகிப் பாய்கின்ற வையையாறு, வயலில் உழவுத் தொழிலைச் செய்யும் உழவர்கள், கருமுற்றிய வாளைமீன் போன்று வயிறு புடைக்க உண்டு தங்கள் சுற்றத்துடன் சேர்ந்து உழவுத்தொழிலைச் செய்யும் பொருட்டுப் பரவிச் சென்றது.

<u>வையைப் புனலின் வனப்பு</u>

(40-50) " இருவரை புரையுமாறு இருகரை ஏமுற்று .... தானையான் வையை வனப்பு "

நீரால் அரிக்கப்பட்டு அடிப்பக்கம் இற்றுப்போன மலைபோல, நீரால் அரிக்கப்பட்டுக் குத்துண்டு நிற்கும் இரு கரைகளாகிய காவலுக்குள் அடங்கி, வெள்ளிப் பனிமலையின் சிகரங்களைப் போன்ற வடிவம் உடைய நுரைகள் பலவற்றையும் சுமந்து கொண்டு, ஆவினால் மூடப்பட்டுச் சோலைகளினிடையே பரந்து வந்தது வையை. மேலும் அவ்வையை, தன்னிடத்தில் விரைந்து நீர் விளையாட்டைச் செய்கின்ற ஆராய்ந்தணிந்த மலர் மாலையினையுடைய பெண்டிரின் காதுகளில் தளிரைச் செருகியும், மலர்ந்த குளிர்ச்சி பொருந்திய மாலையணிந்த ஆடவரின் தலையில் சூடிய தலைமாலைகளைப் பறித்தும், மகளிரின் கைகளில் அணிந்த வளையல் மோதிரம், தலையில் அணிந்த தலைப்பாளை, உடுத்திய ஆடை, அந்த ஆடையின் உள்ளே அணியப்படும் மேகலை, ஆடையின் புறத்தே அணியும் காஞ்சி ஆகியவற்றையும் கவர்ந்து

கொன்றும் இயல்பினையுடையதாய், பகைவரைக் கொன்ற வலிமையினையுடைய பாண்டியனுக்குரிய வையையாற்றில் வந்த புதுவெள்ளத்தின் இயல்பு, பாண்டிய மன்னன், பகைவருடைய தோல்விக்குரிய நிலத்தில் புகுந்து அவர்களை வென்று அவர் நாட்டுப் பொருள்களைக் கவர்ந்து வருதலை ஒத்தலால் வையையின் வனப்பு பாண்டியனின் இயல்பை ஒத்தது என்றார்.

## தோழி புனலணி இன்பம் கூறுதல்

(51-60) "புரிந்த தகையினான் யாறு ஆடுவாருள்
.... வையைப் பெருக்கி வரவு"

பெருந்தகைமையும், யாவராலும் விரும்பப்படும் அழகும் உடைய, பாண்டியனுக்குரிய வையையாற்றில் நீராடுகின்ற கூட்டமாக நின்ற மகளிருள் சிலர் சிவிறியிலிருந்து நீரைச் செலுத்திச் சிதறினர்; ஏனை மகளிர் தம் தூயமலர் போன்ற கண்கள் எல்லாம் அந்நீரை ஏற்று இமைத்தலின்றி அமைந்தன; அப்பொழுது அவ்விளையாட்டில் தோற்றுத் தன் கண்களைப் புதைத்தவளை, அம்மகளிருள் ஒருத்தி வெற்றியினால் இறுமாந்து, தன் கழுத்தில் அணிந்த பொன் நாணால் தொய்யில் எழுதப்பட்ட அணையை ஒத்த மென்மையான தோள்களைக் கட்டிச் சிறையாகப் பிடித்தாள்; அது கண்ட பொன்னாலான கொடி போன்ற ஒருத்தி, அவ்வாறு சிறையானவளுக்கு இரங்கி அவளைக் கையினால் கட்டப்பட்ட அச்சிறையிலிருந்து விடுவிக்கும் பொருட்டுப் பாய்ந்தாள்; அவ்வாறு பாய்ந்தவளுடைய, வாளால் அரியப்பட்ட மாவடு பிளந்தது போன்று, மைதீட்டப்பெற்ற கண்மணி பாய்ந்ததனால், புது வெள்ளமாக வந்த அந்நீரினது சிவந்த நிறம் போய் இருளின் நிறமாகிய கரிய நிறமாயிற்று; வையையாற்றுப் புதுவெள்ளத்தின் அழகு இத்தன்மையுடையது என்று தோழி வையையின் புனலணி இன்பத்தைக் கூறினாள்.

## தோழி தலைமகன் காதன்மை கூறுதல்

(61-76) "விருப்பாய் ஏராணி மெய் ஏரம் தீர, .... ஊருடன் ஆடுங்கை"

இவ்வாறு விருப்பும் நீர் விளையாட்டுக்குரிய பொருந்துள்ள ஏர அணியை உடைய உடல் ஏரம் காய்ந்து வெப்ப முடையதாகும் பொருட்டு, தலைவி வண்டுகள் சுற்றி வந்து மொய்த்தற்குரிய கடுப்பும் வேகமும் உடைய கள்ளைப் பருகுவதற்குத் தன்கையில் எடுத்தான்; அவ்வாறு அவள் கையில் எடுத்த போது அவளது கண்கள் நெய்தல் மலரைப் போன்று கருமையுடையனவாக இருந்தன; மிகுந்த களிப்பினைத் தரும் அக்கள்ளினைப் பருகிய பின் அவளது கண்கள் சிவந்து தோன்றியமையால் கண்டார்க்கும் பெருமகிழ்ச்சியைச் செய்யும் பெரிய தாமரைப்பூவை ஒத்து விளங்கின. அவ்வாறு சிவந்த கண்களின் அழகிய இயல்பைக் கண்டு பாராட்டி பெண்தன்மையுடைய அக்கண்களின் அழகிய நோக்கினை இசைப்பாட்டில் இயைத்துப் பாட விரும்பி, தலைவன் பற்பல பாடல்களையும் பாடினான்; அப்பாடல்களைக் கேட்டவர்களுள் ஒருத்தி, அப்பாட்டினைப் பாடுபவன் தன் காதலியை நோக்கிப் பாடுகிறான் என்பதை அறியாது, தன்னை விரும்பியே பாடுகிறான் எனத் தவறாக நினைத்து, அவனை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் துன்புற்று நின்றாள். அவளது உள்ளக் கருத்தினை அறிந்த அழகிய மார்பினையுடைய தலைவன், இந்நிகழ்ச்சியினைத் தன் தலைவி அறிந்தாளாகில் எனக்கு எவ்வளவு பெரிய துன்பம் வருமோ? அறியேனே என்று எண்ணி மனம் சோர்ந்து அவ்விடத்திலிருந்து வேகமாக நீங்கித் தலைவியை அணுகி அச்சத்தால் உடல் நடுங்கி நின்றான்.

முன்பே கள்ளுண்டு சிவந்த கண்கள், குறை கிடந்த ஊடல் காரணமாய்ச் சிவந்து தோன்ற, தம்முள் இருவகையாகப் பிரிந்து நீராடும் மகளிருள், முன்னைத் தலைவனது பாட்டினைக் கேட்டு

மயங்கி நின்றவளோடு தலைவி பகைமிக்கொண்டு, மிகவும் சினந்து, தன் மாலையினை அறுத்து எறிந்து நின்றாள்; அப்பொழுது வையை நீராடியதன் காரணமாக அழகுபெற்ற தலைவியின் உடம்பினது அழகினைக் கூர்ந்து பார்த்துக்கொண்டு நின்ற அவள் காதலன் சினந்து நின்ற தலைவிக்கு அஞ்சி, சந்தனம் பூசப்பட்ட தனது உடம்பு அழகிய மண்ணில் படும்படி வீழ்ந்து வணங்கினான்; அவ்வாறு வணங்கியும் தன் சினம் தீராதவளாக அத்தலைவனது தலையை உதைத்து ஊடல் கொண்டாள். ஊர் மக்களோடு வையையில் புதிய நீர் ஆடிய போது இவ்வாறு நிகழ்ச்சிகள் பல நடந்தன.

## தோழி வையையின் நீரணியின்பம் குறித்துக் கூறுதல்

(77 – 86) " புரி நரம்பு இன் கொளைப் புகல் பாலை ஏழும்
.... நின் படிந்து நீங்காமை இன்று புணர்கெனவே"

யாவராலும் விரும்பப்படும் பாலைப்பண் ஏழினையும் எழச் செய்து புணர்த்து நற்குரிய, முறுக்கேறிய நரம்பின் வழி இனிய தாளத்திற்கேற்ப அசையும் யாழின் இசையும், வாயினால் பாடும் இசையும் தம்முள் பொருந்தின; அவற்றின் இசையைப் பொருந்தி, குழலாகிய கருவி அளந்து நின்றது; முழவத்தின் ஓசை எழுந்து முழங்கியது; அரசவையில் ஆடி அரசனால் பாராட்டும் தலைக்கோல் பட்டமும் அளிக்கப் பெற்ற மகளிரும், பாணரும் தங்கள் கூத்தாடலைத் தொடங்கினர்; இவ்வாறான பல்வேறு முழக்கங்களுடன் வெள்ளமாகப் பெருகி ஓடும் நீர் கரைகளுடன் மோதிக்கொண்டு செல்வதால் எழுந்த முழக்கமும் சேர்ந்து பெரிதாக முழங்கும் தன்மை, இடியேற்றுடன் சேர்ந்த மேகத்தின் முழக்கத்தைப் போன்றதாகும்.

திருமருத முன்றுறை என்னும் பெயரினையுடைய துறையினை அடைந்து வையை நீரில் ஆடி இன்பத்தைப் பெறுவோர் மலர் மாலைகளை வாங்கி உன் தலையிடத்தில் சூட்டி மகிழ்தற்கு

காரணமான அச்சம் தரும் ஆழமான நீர்நிலையுடைய வையை யாறே! நாங்கள் உன்னிடத்தில் நீராடி நுகர்ந்த இவ்வின்பத்தை அடைந்தது போலவே, என்றும் உன்னிடத்தில் நீராடி உன்னால் பெறும் இன்பத்தைப் பாராட்டிப் பாடி துன்பம் நீங்கப் பெற்று மகிழ்வோமாக!

## திருமால்

### திருமாலைத் தொழுவார் பெறும் பேறு :

(1-13) "மணி வரை உயர்ந்த மருங்கில் ஞாயிற்று .....
உரித்து அமர் துறக்கமும் உரிமை நன்கு உடைத்து."

நீலமணியினது நிறம் பொருந்திய மலையினிடத்து, இளைய ஞாயிற்றின் அழகையொத்த அழகுகொண்ட ஆத்தாழில் சுற்றுப்பெற்ற ஆடையையும், நீல நிறம் பொருந்திய மலையின் மீது ஞாயிறு உயர்ந்து வந்த அழகை ஒத்த அழகு கொண்ட மணி முடியையும் கொண்ட திருமாலே! அம்மலையிலிருந்து சறுக்கி வரும் பொன்மணிகளைக் கொண்ட அருவியின் நிறத்தோடு மாறுபட்ட மாலையைச் சூடியவனே! கருடப் பறவையின் உருவம் எழுதிய அழகமைந்த கொடியை உடையவனே! வானத்திலிருந்து உலகைக் காக்கும் தொழிலைக் கொண்ட முழுமதியினது குளிர்ச்சியைப் போன்ற குளிர்ந்த காக்கும் தொழிலைக் கொண்டவனே! கார்ப்பருவம் வந்த போது பெரிய மேகத்தை அதன் இருபக்கமும் சூழ்ந்து அழகு செய்யும் தண்மை, வெம்மை ஆகிய இருவேறுபட்ட ஞாயிற்றையும் திங்களையும் போல விளங்கும் சக்கரமும் சங்கும் ஏந்திய கையை உடையவனே! மழை பெய்வதற்குரிய நீர்த்தொகுதியை உடைய மின்னலின் விளக்கத்தைப் போன்று பொலிவு பெற்று விளங்கும் பொன்னாலாகிய ஆரத்தினை, அருவியின் வடிவத்தைக் கொண்ட முத்தாரத்தோடு அணிந்த உனது அழகிய மலை போல விளங்கும் திருமார்பு. அதனை வழிபடுவோர்க்கு, நீ விரும்பி உறைகின்ற திருவைகுந்தமாகிய வானுலகம் உரிமையாதலை உடையது.

### எங்குமாய் எல்லாமாய் நிறைந்த பெருமை

(14-25) "சுவையை, இசையை, தோற்றம், நாற்றம், ஊறு, ... காலமும், விசும்பும், காற்றொடு கனலும்"

பகைவரைப் போரில் வெல்லுகின்றவனும்

தலைமைத் தன்மை உடையவனுமாகிய திருமாலே! சுவையும் ஒலியும், ஒளியும், நாற்றமும், மெய்யின் கண் உணர்வு -மாகிய புலன்களும் நீயே ஆவாய். அவற்றை அறியவும் உணரவும் செய்கின்ற வாய், செவி, கண், மூக்கு, உடம்பு ஆகிய ஐம்பொறிகளும் நீயே ஆவாய். இவ்வாறு எல்லாமாய் முற்சொல்லப்பெற்ற ஐம்புலன்களுள்ளும், முதற்புலனாகிய ஓசையால் உணரப்பட்ட ஆகாயமும் நீயே; ஓசை, ஊறு ஆகிய இரண்டு புலன்களால் உணரப்பட்ட தீயும் நீயே; ஓசை, ஊறு, ஒளி, சுவை ஆகிய நான்கு புலன்களால் உணரப்பட்ட நீரும் நீயே; ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய ஐந்து புலன்களாலும் உணரப்பட்ட நிலமும் நீயே! ஆதலால் மூலப்பகுதியும், அறமும் தொடக்கம் அறியப்பெறாத காலமும், ஆகாயமும், காற்றும் நெருப்பும் சூழ்ந்த இம்மூவேழ் உலகத்து உயிர்கள் எல்லாம் நின்னிடத் -தவாயின.

<u>பல்வேறு தோற்றத்துடன் விளங்கும் ஒரு முதல்வன்</u>

(26-37) " தன் உரு உறழும் பாற்கடல் நாப்பண் ....
மூவுரு ஆகிய தலைபிரி ஒருவனை "

தனது நீல நிறத்தோடு மாறுபடும் வெண்மை நிறத்தினை உடைய பாற்கடலின் நடுவில், மின்னலைப் போலத் திகழ்கின்ற சுடர்விடுகின்ற மணியோடு விரிந்த தலை ஆயிரத்தோடு விளங்கும் ஆதிசேடனாகிய படுக்கை மீது, துழாய் மாலை அணிந்து உறங்குகின்ற யோக நித்திரை உடைய திருமால்; வீரமும் வெற்றி ஆரவாரமும், பகைவரை வருத்துகின்ற அப்பகைவரின் உயிரைப் போக்குகின்ற, வெற்றி மிக்க ஆற்றலுடையவனும் ஆரவாரம் மிக்க தன்னால் உவப்படும் புகழினை உடையது போலப் பகைவருடைய மார்பை உழுகின்ற வளைந்த வாயினைக் கொண்ட கலப்பை -யைப் போர்க்கருவியாக ஏந்தியவனுமாகிய பலதேவன்; முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு கூறுபட்ட இவ்வுலகத்தில் வாழும் உயிர்களின் நடுக்கம் தீருமாறு அந்நிய உலகைக் கடலிலிருந்து வெளியே நெம்பிக் கொண்டுவர, கொம்பு முழுவதுமாகப் போர்த்தும், அழகிய மணிகளைக் கொண்ட மடலை உடையதும் ஆகிய பெரிய கிம்புரியை அணிந்து விளங்குகின்ற ஒற்றைக் கொம்புடைய ஆண்பன்றியாக உருக்கொண்டவன்; இவ்வாறும் நான்முகன் உருத்திரன் திருமால் எனவும் மூன்று வேறு உருவாகித் திகழும் ஒப்பற்ற இறைவன் நீ!

## புகழ்ந்து போற்றுதல்

38 - 56

" பண்ணிறைப் பல்நிறப் பாம்புப் பகைக்கொடிக் .....
வெள்ளியும், மாறும், விருப்பொடு வெய்யை "

திருமாலே! நீ பல நிறங்களைக் கொண்டதும் விரிந்த சிறகினை உடையதும், பாம்புக்குப் பகையானதும் ஆகிய கருடப்பறவையைக் கொடியாகக் கொண்ட, நடுவுநிலையிலிருந்து நீங்காத பேரருட் செல்வன் ஆவாய். கருடச் சேவல் எழுதப்பட்ட ஓங்கி உயர்ந்த கொடியை உடையவனே! நீ ஒத்தாற்றின் இனிய வேதத்தால் சொல்லப்படும் நல்ல புகழை உடையவன். நீ மேகம், காயாம்பூ, கடல், இருள், நீலமணி ஆகிய ஐந்தின் நிறத்தையும் ஒத்த அழகு பொருந்திய திருமேனி கொண்டவன். நின்னிடத்து அருளுடைமை காரணமாகத் தோன்றும் மொழிகளும், பிறரை ஒறுக்கும் பொருட்டாகத் தோன்றும் கடுமொழிகளும், நிரலே, வலம்புரிச் சங்கின் ஒலி, வேதமுழக்கம், மேகத்தின் ஆர்ப்பு, இடியின் ஓசை ஆகிய நான்கையும் ஒத்திருக்கும். நீ தோன்றி முடிந்ததும், இனித் தோன்ற இருப்பதும், இப்பொழுது தோன்றுவதுமாகிய மூன்று காலக் கூறுபாடுகளையும் கடந்து அம்மூன்று காலப்பகுதிகளும் பொருந்தும் திருவடி நிழலைக் கொண்டவன்.

உன்னைப் போற்றி வழிபடும் உயிர்களுக்கு நல்வினை, தீவினைகள் இல்லையாம். தோற்றுவித்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களில் காத்தல் தொழிலத்து நீ உள்ளம் பொருந்தும் பண்பினை. உன் திருவடிகளும், திருக்கரங்களும், திருக்கண்களும், திருவாயும், பசிய இலைகளைக் கடந்து மேல்தோன்றிய மலர்ந்த பெரிய இதழ்களால் பொருந்திய தாமரைப் பூப் போன்றனவாம். பெருமானே! நீ உன் கழுத்தும், தொடியும், திருவுந்தியும், தோளில் அணியும் வாகுவலயமும், திருவடியும் தோளும் பொலியன. உன் மார்பும், பின்புறமும், உள்ளத்தோடு ஒத்தனவாய்ப் பெருமை உடையன. அடியவரின் குறை கேட்டறியும் பண்பும், பிறர் கூறாது தாமே அறியும் அறிவுடைமையும், உலகை இயக்கும் நின் அறமும் மிகவும் நுண்ணியனவாகும். நீ வெள்ளியாடத்து விருப்பம் உடையை; ஆனால் அறத்திற்கு மாறான மறத்திடத்தே வெம்மையானவன்.

(57-64) "அராஅ அமர்ந்தின், சோராச் செங்கண் ...
இன்றும் இன்றும் என் காவல் இதுவே."

நீங்காத வலிமையினையும், நினைத்தால் அச்சமூட்டும் இயல்பாகவே சிவந்த கண்ணினையும், போரில் வெல்லும் சக்கரப் படையால் இயற்றும் போரையும் உடைய செல்வனே! நிறத்தினால் நெருப்பைப் போன்ற வெட்சிப் பூவை இடையிட்டுக் கட்டிய இறுக்கமடைந்த மலரையுடைய நறுமணமிக்க துளசி மாலையைக் கொண்ட மார்பை உடையவனே! முற்பிறவிகளிலும், இப்பிறவியில் முன்னதாகவும் நாங்கள் செய்த தவத்தின் பயனாக மேற்கூறிய தன்மைகள் எல்லாம் பொருந்தியவன் நீயென்று கருதி உன் திருவடிகளைக் கைகளால் தொழுதோம்; வாயினாலும் மனத்தினாலும் வாழ்த்தினோம். நாங்கள் மேலும் மேலும் விரும்புவது இதுவேயாகும்.

## பகுதி - அ

1. பரிபாடல் குறிப்பு வரைக
2. பரிபாடலில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன?
3. பரிபாடலில் புலவர்கள் முருகனிடம் வேண்டுவது யாது?
4. வையைப் புனலின் வனப்பு குறித்து விளக்குக
5. திருமாலைத் தொழுவோர் பெறும் பேறு யாது?
6. திருமாலைப் புலவர்கள் எவ்வாறு புகழ்ந்து போற்றுகின்றனர்?

## பகுதி - ஆ

1. முருகப்பெருமானின் பிறப்பு பரிபாடலில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
2. முருகப் பெருமான் தேவர் சேனைக்குத் தலைவனான விதத்தினைக் குறிப்பிடுக
3. வையைப் புனலின் வருகையினைக் குறிப்பிடுக
4. புனலின் செயல் பரிபாடலில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
5. வெள்ளப் பெருக்கைக் கண்ட மக்களின் செயல் யாது?
6. வையைப் புனலின் வனப்பினை விளக்குக

## பகுதி - இ

7. பல்வேறு தோற்றத்துடன் திருமால் திகழும் விதத்தினை ஆய்க.

## பகுதி - இ

1. பரிபாடல் வழி செவ்வேளின் சிறப்பினை ஆராய்க
2. வையைப் புனல், வெள்ளப் பெருக்கு, புனலின் வனப்பு, வையையின் நீராடலின்பம் போன்ற செய்திகள் பரிபாடலில் எவ்வாறு வர்ணிக்கப்பட்டு -ள்ளது?

3. பரிபாடலில் திருமாலின் பெருமைகள் குறித்து விளக்கி வரைக